ந.க.எண். அ2/2847/2019
அணி ஆணை: 1178/2020

தளவாய் அலுவலகம்.
த.சி.கா முதலணி, திருச்சி
நாள்: 18.11.2020

## இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்

**பொருள்** : காவல் - த.சி.கா. முதலணி, திருச்சி — பணியமைப்பு - அமைச்சுப்பணியாளர் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட செல்வி.K.நிவேதா என்பவரை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

**பார்வை** : 1) செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 1351/பி.எஸ்.டி-ஜி1/2019, நாள். 18.02.2019.

2) காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அவர்களின் பணி நியமன ஆணை ந.க.எண். 004813/என்.ஜி.பி. 2(2)/2018, நாள். 06.03.2019.

3) இவ்வணி அலுவலக பணி நியமன ஆணை எண். 229/2019 ந.க.எண். அ2/2847/2019, நாள்.11.03.2019.

4) தலைவர்/மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட விழிக்கண் குழு, திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். W7/31893/2019, நாள். 04.09.2020.

5) காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை அவர்களின் குறிப்பாணை ந.க.எண். 004813/என்.ஜி.பி. 2(2)/2018, நாள். 05.11.2020

பார்வை 01 மற்றும் 02-ல் காணும் ஆணைகளின் படி, செல்வி.K.நிவேதா இளநிலை உதவியாளர் என்பவர் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுக்கான இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களில் (Group-IV) தேர்வின் படி நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு, பார்வை 03-ல் காணும் இவ்வலுவலக ஆணையின் படி இவ்வணி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக (Group-IV) 13.03.2019 அன்று முற்பகல் பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 02-ல் காணும் ஆணையின் படி, மேற்காணும் இளநிலை உதவியாளரின் தந்தையின் பிறப்பிடமானது தமிழ்நாடு அல்லாத வேறு பிறப்பிடமாக இருப்பதால் பணி நியமனம் வழங்கப்படும் இளநிலை உதவியாளரது சாதி சான்றிதழின் உண்மைத்தன்மையினை உறுதி செய்த பின்பு பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தியதின் படி, பார்வை 04-ல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் இவரது சாதிச்சான்று மாவட்ட விழிக்கண் குழுவால் மெய்த்தன்மை வாய்ந்தது என அங்கீகரித்து ஆணையிடப்பட்டுள்ளது.

இவர் இளநிலை உதவியாளராக (Group-IV)-ல் பணிக்கு அறிக்கை செய்த நாளான 13.03.2019 முற்பகல் முதல் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

இப்பணிவரன்முறை 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டுக்கான (Group-IV) பணி தேர்வின் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது.

மேலும், இவர் பணி ஏற்பு செய்த நாளான 13.03.2019 முற்பகல் முதல் மூன்று ஆண்டு காலம் தொடர்ச்சியான பணியில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுகிறார். மேலும், தகுதிகாண் பருவ காலத்தில் பவானி சாகர் அடிப்படை பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது.

ஒம்/-மு.ஆனந்தன்,
தளவாய்,
த.சி.கா முதலணி, திருச்சி.

**பெறுநர்:**

செல்வி.K.நிவேதா, இளநிலை உதவியாளர், த.சி.கா முதலணி, திருச்சி-12.

**நகல்:** காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை-04.

**நகல்:** கூடுதல் காவல்துறை இயக்குநர், ஆயுதப்படை, சென்னை-10.

**நகல்:** செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை.

**நகல்:** காவல்துறை தலைவர், ஆயுதப்படை, சென்னை/திருச்சி.

**நகல்:** "அ3", "பி1", "டி2", "இ2" உதவியாளர்கள்/இ.நி.உதவியாளர், த.சி.கா முதலணி, திருச்சி.

**நகல்:** அணி ஆணை புத்தகம் / உதிரி.

**// உ.ந.உ.ப.அ //**

20/11/2020

நிர்வாக அதிகாரி
20/11/2020